2008 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சையது கௌஸ் பாஷா.

முற்பகல் 10-20

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொண்டு நிறுவனங்களைப் பொறுத்தவரை, முதியோர்களைச் சேர்ப்பதில் பல்வேறு நிபந்தனைகளையும், விதிமுறைகளையும் காட்டி, அனைவரையும் சேர்ப்பதற்கு முன்வருவதில்லை. அதனால் அரசின் சார்பிலேயே மாவட்டத் தலைநகரங்களில் முதியோர் காப்பகம் நடத்தி ஆதரவற்ற அனைத்து முதியோர்களையும் நிபந்தனையின்றிச் சேர்க்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. விரைவில் நடைபெறும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 158. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**158—**

**கால்நடை மருத்துவமனை**

***31791—திரு. செ. புஷ்பராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி திருமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட புதுக்குப்பம் கிராமத்தில் 29-2-2008 அன்று புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வைத்த கோரிக்கையை ஏற்று திருமங்கலம் பஞ்சாயத்து, புதுக்குப்பத்தில் கால்நடை மருந்தகம் அமைத்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையில், மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டும். கண்டமங்கலம், எறையூர் ஆகிய கால்நடை மருந்தகங்களிலிருந்து இரண்டு நாட்களுக்கு மட்டுமே மருத்துவர்கள் வருகிறார்கள். ஆகவே, நிரந்தரமாக மருத்துவர்களை நியமனம் செய்து, புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அந்தப் புதிய கால்நடை மருந்தகத்திற்குப் பகுதிநேரமாக உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அரசு தற்போது 220 கால்நடை உதவி மருத்துவர்களை அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் எடுப்பதற்கு உத்தரவிட்டுள்ளது. அவர்கள் தேர்வு செய்யப்பட்டதும், மேற்படி புதுக்குப்பம் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரமாக மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவர். அதுபோல, அந்தக் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கேட்டார்கள். நிச்சயமாக அதை வரும் ஆண்டில் இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி விக்கிரவாண்டி ஒன்றியம், இராதாபுரம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் உள்ளது.

2008 ஏப்ரல் 25]

இங்கிருந்து கால்நடை மருந்தகத்திற்குச் செல்ல வேண்டுமேயானால், 15 கி.மீ. தூரத்திலுள்ள விக்கிரவாண்டி, 10 கி.மீ. தூரத்திலுள்ள புதுக்குப்பத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதனால், இந்த ஆண்டே இராதாபுரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி ஒன்றியத்திலுள்ள இராதாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த அரசு அதனைப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளை பேரூராட்சிப் பகுதியிலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடைகளை அதிகம் வளர்த்து வருவதால் கால்நடை மருந்தகம் வேண்டும் என்று முன்பு மானியக் கோரிக்கையின்போதுகூட நான் கேட்டேன். அமைச்சர் அவர்கள், ஆவன செய்யப்படும் என்று சொன்னார்கள். இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதனால், உரிய ஆய்வு செய்து கால்நடை மருந்தகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் எண்ணிக்கைக்குமேல் கால்நடைகள் இருக்கிற கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவுப்படி 10 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன. நீங்கள் கூறும் அந்தக் கிள்ளை நகர்ப் பகுதியிலே ஒருவேளை கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்திருக்கலாம். அதனால் நிச்சயம் வரும் ஆண்டில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியில் பிலிக்கல்பாளையம் ஊராட்சியைச் சுற்றி ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலேயிருந்து 15 கி.மீ. சுற்றளவிற்கு எந்தக் கால்நடை மருத்துவமனையும் இல்லாததால், அங்கு ஒரு கால்நடை மருத்துவமனையைத் துவக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**159—**

**சமுதாயக் கூடம்**

***32395—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் ஆதி திராவிடர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு அரசின் செயற்குறிப்பில் இல்லை.